 ISSN: 2454-3993

# பண்டையத் தமிழரின் பழக்கவழக்கங்கள்

**த. மகேஸ்வரி**
உதவிப் பேராசிரியர், தமிழ்துறை
மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி

பழக்கம், வழக்கம் என்னும் இரு தமிழ்ச்சொற்களும் இக்காலத்தில் பலரால் ஒரு பொருட்கிளவியாகப் பயன்படுத்தப்பட்ட போதிலும், அவற்றுக்கு இடையே வேறுபாடு உண்டென்பதனைச் சமூகவியலார் காட்டியுள்ள விளக்கங்களால் உணரலாம். இச்சொற்களின் வடிவம் ஒன்று போலவே காணப்பட்டாலும், பழக்கம் என்பதற்குப் 'பழகு' என்பதும், வழக்கம் என்பதற்கு 'வழங்கு' என்பதும் பகுதிகளாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. "'பழக்கம்' என்பது தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிக்கும்." 1. என்றும், "பழக்கத்தின் தொடர்ந்த நிலையே வழக்கமாகும். வழக்கம் என்பது ஏற்புடைமை உடைய சமூக நடவடிக்கை என்றும், குழுவிலுள்ள பலருடைய மனவெழுச்சி, உணர்ச்சி ஆகியவற்றுடன் இயைந்து நிற்பது" என்றும் பாஸ்கல் கிஸ்பர்ட் கூறுவர். 2. இவ்வாறே பழக்கத்திற்கு விளக்கம் கூறும் கலைக்களஞ்சியம், "நனவுடன் தொடங்கிய செயல், நாளடைவில் நனவின்றியே நிகழக்கூடியதாக ஆகிவிடும் போது அது பழக்கம் எனப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளது. 3. தனிமனிதனும், சமுதாய அமைப்பும் சேர்ந்து பழக்கவழக்கங்களை உருவாக்குகின்றன. இப்பழக்கவழக்கங்கள் சமூகத்தின் குறிக்கோள்கள், தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றுகின்றன. சங்ககால மக்கள் மேற்கொண்ட, பிறைதொழுதல், குறிகேட்டல், கைமைநோன்பு, வளையல் கழிதல், காக்கைக்கு பலியுணவு கொடுத்தல், இறந்தவரை தாழியிற் புதைத்தல், நடுகல் வழிபாடு, வெறியாட்டு, சிலம்புகழி நோன்பு, குடவோலை முறை போன்ற பழக்கவழக்கங்களின் மூலம் அக்காலச் சமுதாயத்தின் உயர்ந்த நோக்கங்களை அறியமுடிகின்றன.

## பிறைதொழுதல்

தமிழகத்தில் பண்டைக்காலந்தொட்டு இன்றுவரை பிறைதொழுவது என்னும் பழக்கம் மரபாக இருந்து வருகின்றது. பிறைதொழுவதால் தங்கள் வாழ்வில் செழிப்பும் வளர்ச்சியும் ஏற்படும் என பண்டைத்தமிழர் கருதினர். பிறையினை போற்றி வழிபடும் மரபு பண்டைய நாகரிக நாடுகளில் சிற்சில வேறுபாடுகளுடன் இருந்துள்ளது என்பர். இளங்கோவடிகள் தம்நூலின் தொடக்கத்தில் உலகைக் காக்கின்ற ஞாயிறு, மழை, ஆகியவற்றோடு திங்களையும் போற்றி பாடியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கதாக விளங்குகிறது.

சங்க காலத்தில் மங்கை பருவம் அடைந்த பெண்கள், நல்ல கணவனும் சிறந்த வாழ்க்கையும் அமைதல் வேண்டும் என்னும் நோக்கத்தோடு மாலைக் காலத்தே பிறையினைப் போற்றி வழிபட்டதை,

**ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்**
**புல்லென் மாலை (அகம். 239: 9-10)**

என அகநானூறும்,

**பலர் தொழச்**
**செவ்வாய் வானத்து ஐயெனத்தோன்றி இன்னம் பிறந்தன்று பிறையே** (குறுந். 307: 1-3) என்று குறுந்தொகையும் குறிப்பிடுவதால், பிறைதொழும் பழக்கத்தையும் அதன் பயனையும் காணமுடிகிறது.

## குறிகேட்டல்

பண்டையக் காலத்தில் குறிகேட்கும் பழக்கம் மிகுதியாக இருந்தது என்பதனை அகப்பொருள் இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. "தென்னாட்டு அகமுடையார், கள்ளர், மறவர் வகையில் சேர்ந்தவரில் சிலர் பெரிய முண்டாசு தலையில் சுற்றியும், வெள்ளிகட்டிய பிரம்பு கையில் கொண்டும் மிதியடியிட்டும் சில பாட்டுகளை மனப்பாடம் செய்துகொண்டு பெண்களுக்கும் ஆண்களுக்கும் நிகழ்கால எதிர்காலச் செய்தியை கூறுபவர்போல் நடித்து பொருள் கொள்பவரே குறிசொல்வோர்

ஆவர்" என அபிதான சிந்தாமணி கூறுகிறது. இவ்வாறு பொய்கூறி நடிப்பவர்களுக்கு இடையே உண்மை கூறுபவர்களும் இருக்கின்றனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இதனை தெய்வ வாக்கு என்றும் கூறுவர். வேலன், பொய்க்கூறாத முறையினை உடைய கழங்குகளாலே (கழற்சிகாய்) ஆராய்ந்து உண்மையினை கூறும் வழக்கத்தினை கொண்டுள்ளான் என்பதை,

**பொய்யா மரபினூர்முது வேலன்**
**கழங்கு மெய்ப் படுத்துக் கன்னந் தூக்கி (ஐங். 245: 1-2)**

எனக் குறிப்பிடப்படுகிறது. தலைவியைத் தலைவன் பிரிந்து சென்றதனால் அவளுக்குப் பசலை தோன்றியது. இதனை அறிந்த அன்னை முதுமைமிக்க கட்டுவிச்சி முதலானோருடன் வீட்டின்கண் நெல்லைப் பரப்பிக் கட்டுவைத்து அக்கட்டுகளுக்கு எதிரே நம்மை நிறுத்திக் குறிகேட்பாள் என தோழி கூறுவதாகக் குளம்பனார்,

**நல்நுதல் பரந்த பசலைகண்டு அன்னை**
**செம்முது பெண்டிரொடு நெல்முன் நிறீ,**
**கட்டின் கேட்கும் (நற். 288: 5-7)**

என நற்றிணை வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

**கைம்மை நோன்பு**

கணவன் இறந்தால் மனைவியும் கணவனுடன் தீப்புகுதலை உடன்கட்டை ஏறுதல் என அழைத்தனர். இதனை அன்றைய தமிழர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர். இவ்வகையில் பெருங்கோப்பெண்டு கணவனுடன் தீப்புகுதலை சான்றோர் தடுத்தனர். இதனால் சினம் கொண்ட பெருங்கோப்பெண்டு, கைம்மை மகளிர் நெய்யை உணவில் சேர்த்துக் கொள்ளாமல், நீர்ச்சோற்றை வேளைக்கீரையுடன் உண்பர். மேலும், பருக்கைக் கல் பரப்பப்பட்ட படுக்கையில் பாய் இன்றி படுப்பர். இவையெல்லாம் கைம்மை நோன்பு மேற்கொள்ளும் பெண்களின் இயல்பாகும். ஆனால், இத்தகைய நோன்பு மேற்கொள்பவருள் நானும் ஒருத்தியாக இருக்க மாட்டேன் என உரைத்தார். இதனை,

**காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டாது**
**...............................................**
**உயவற் பெண்டிரேம் அல்லேம் மாதோ (புறம். 246: 5-10)**

என உணர்த்துவதால் கைம்மை நோன்பை மேற்கொள்ளும் பெண்களின் இயல்பை அறிய முடிகிறது. எவ்வியன் மனைவியர; அவன் இறந்து கிடந்த சிறிய இடத்தை வட்டமாக மெழுகி தூய்மை செய்து, அங்கு இலை இட்டு அதன் மீது தருப்பைப் புல்லை வைத்து அதன் மேல் நல்ல சுவையில்லாத உணவை வைத்துப் படைத்து உண்பர். இதனை,

**பிடிஅடி அன்ன சிறுவழி மெழுகித்**
**தன் அமர் காதலி புன்மேல் வைத்த**
**இன்சிறு பிண்டம் யாங்கு உண்டனன் கொல் (புறம். 234: 2-4)**

எனக் குறிப்பிடுவதால் தெளிவாகிறது.

**வளையல் கழிதல்**

வெளிமான் இறந்து சுடுகாட்டை அடைந்த பொழுது. வளையல் கழிக்கப்பட்ட அவனுடைய உரிமை மகளிரைப் போல பழைய அழகு வாடி, அவனைப் போற்றி பாடுவோரின் கூட்டமும் ஒளி குன்றின என்பதை பெருஞ்சித்திரனார்,

**தொடிகழி மகளிரின் தொல்கவின் வாடிப்**
**பாடுநர் கடும்பும் பையன் றனவே" (புறம். 238: 6-7)**

எனக் கூறுகிறார். கணவன் இறந்தால் அவனின் மனைவிக்கு வளையல் கழிக்கப்படுவதையும் இதனால் அவர்களின் பழைய அழகு பறிக்கப்படுவதையும் இங்கே காண முடிகிறது. இவ்வழக்கம் இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

**காக்கைக்குப் பலியிடல்**

உணவு உண்ணுவதற்கு முன் காகத்திற்கு உணவு இடும் பழக்கத்தினை இன்றும் கிராமப்புறங்களில் காணமுடிகிறது. ஈமச் சடங்குகள் செய்த பின்னும், இறந்தோரின் நினைவு நாளான திதியின் பொழுதும், அமாவாசை நோன்பின் போதும் காக்கைக்கு உணவு இடும் வழக்கம் இருந்து வருகின்றது. தென்னை மரங்கள் நிறைந்த தோப்புகளில் வாழும் குடிமக்கள் வெம்மையுடைய சோற்றோடு நெய்கலந்து இடும் பலிசோற்றை காகம் உண்ணும் என்பதை,

**பல்லா பயந்த நெய்யின் தொண்டி**
**........................................**
**விருந்து வரக் கரைத்த காக்கையது பலியே (குறுந். 210: 2-6)**
**உகுபலி அருந்திய தொகு விரற் காக்கை (நற். 343: 5)**
**செஞ்சோற்ற பலி மாந்திய**
**கருங்காக்கை (பொருந. 183-184)**

எனும் பாடலடிகள் தெரிவிக்கின்றன.

**இறந்தவரைத் தாழியிற் புதைத்தல்**

சங்ககால மக்கள் இறந்தவர்களின் உடலைத் தாழியில் இட்டுப் புதைக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். தலைவி உடன்போக்குச் சென்றதை அறிந்த அவள் தாய், என்னை பெரிய கரிய தாழியிலிருத்தி கவிக்கும்படி என்னுயிரைக் கூற்றுவன் கொண்டு செல்லவில்லையே எனக் கூறி வருந்துவதாக,

**மா இருந்த தாழி கவிப்ப**
**தாஇன்று கழிக எற்கொள்ளாக் கூற்றே (நற். 271: 11-12)**

எனும் நற்றிணை பாடலடிகள் தெரிவிக்கின்றன. பிணத்தை இட்டுப் புதைக்கப்பட்டுக் கவிக்கப்பட்ட தாழியின் வாய்புறத்தே கழுகும், பொகுவல் என்ற பறவையும் உள்ளன என்பதைப் பெருஞ்சித்திரனாரின்,

**கவிசெந் தாழிக் குவிபுறத்து இருந்த**
**செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவர (புறம். 238: 1-2)**

எனும் பாடலடிகள் வாயிலாக விளக்கிறார். இதனால், இறந்த பின்பு உடலைத் தாழியில் இட்டு மூடும் வழக்கத்தை அன்றைய மக்கள் கடைப்பிடித்து வந்தனர் என்பது தெளிவாகிறது.

**நடுகல் வழிபாடு**

நடுகல் என்பது ஒருவர் இறந்தபின்பு அவர்களின் பெயரையும் புகழையும் எழுதி நடுகல் அமைத்து பின் அக்கல்லைத் தெய்வமாக வழிபடுவர். நெடுமான் அஞ்சியின் நடுகல்லுக்கு மயில் இறகு சூட்டி அவன் விரும்பும் உணவைப் படைத்து வழிபட்டனர் என்பதை ஔவையார்,

**நடுகல் பீலி சூட்டி நார் அரி**
**சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ (புறம். 232: 3-4)**

எனப் புறநானூறு வாயிலாக விளக்குகிறார். இறந்தவர்களுக்கு நடுகல் நடுவதும் அவர்களைத் தெய்வமாக்கி வழிபடுவதும் பண்டையத் தமிழர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகிறது. மேலும் இவ்வழக்கம் இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

வெட்சி மறவர் பசுக்களைக் கவர்ந்து செல்ல, கரந்தை மறவர் தன்னுயிரைக் கொடுத்து மீட்டனர். இவ்வாறு உயிர்ஈந்த மறவர்க்கு நடுகல் எழுப்பப்பட்டு அவற்றில் அவ்வீரன் பெயர் மற்றும் சிறப்பு எழுதப்பெற்று அதன்முன் வேல், சிடுகு போன்ற கருவிகளும் வைக்கப்பட்டு வழிப்பட்டனர். இதனை மருதன் இளநாகனார்,

**கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்**
**பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்**
**பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்**
**வேல் ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும் (அகம். 131: 9-12)**

எனக் கூறி தெரியபடுத்துகிறார். விடியற்காலத்தில் நடுகல்லுக்கு நல்ல நீரை முழுக்காட்டி நெய்விளக்கு ஏற்றி பலியுணவைப் படைத்து வழிபடுவதை இளவேட்டனார்,

**புடைநடு கல்லின் நாட்பலியூட்டி**
**நன்னீர் ஆட்டி நெய்ந்நறைக் கொளீஇய (புறம். 329: 2-3)**

எனும் பாடலடிகளால் விளக்கியுள்ளார்.

**வெறியாட்டு நிகழ்த்துதல்**

இரவு நேரத்தில் தன்னைக் காணவரும் தலைவனை நினைத்து துன்பத்தில் ஆழ்ந்திருந்த தலைவியைக் கண்ட அவள் அன்னை, இது தெய்வத்தால் ஆனதோ என எண்ணி ஐயம் கொண்டு மனையில் முருகனை வரவழைத்து வெறியாடும் கட்டுவிச்சியும் வேலனும், வேம்பினது இலையையும் நீலநிறப் பூக்களையும் சூடி இருந்தனர் என்பதை,

**குவளை உண்கன் தெண்பனி மல்க**
**வறிதுயான் வருந்திய செல்லற்கு அன்னை**
**பிறிது ஒன்று கடுத்தனார் ஆகி வேம்பின்**
**வெறிகொள் பாசிலை நீலமொடு சூடி (அகம். 138: 2-5)**

என அகநானூற்று பாடலடிகள் விளக்குவதால் காணமுடிகிறது. தலைவியின் உடலில் மாற்றங்கள் தோன்றுமாயின் அது தெய்வகுற்றமாகக் கருதிய அவள் தாய் முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்துவாள். இதனை,

**மென்தோள் நெகிழ்த்த செல்லல் வேலன்**
**வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்**
**அதுவென உணரும் ஆயின் ஆயிடை (குறுந். 111: 1-3)**
**மணிபுரை வயங்கிழை நிலைபெறத்**
**தனிதற்கு முரித்தவளுற்ற நோயே (ஐங். 210: 4-5)**
**மறிக் குரல் அறுத்து தினைப்பிரப்பு இரீ,' (குறுந். 263: 1)**

எனும் பாடலடிகள் விளக்குவதால் அறிய முடிகிறது.

**சிலம்பு கழி நோன்பு**

திருமணத்துக்கு முன் தலைவி காலில் சிலம்பு அணிதலும் மணம் புரிவதற்கு முன் தலைவியின் பெற்றோர்களால் அவள் காலில் உள்ள சிலம்பை நீக்குவதும் வழக்கமாகக் கொண்டிருந்ததைச் சிலம்பு கழி நோன்பு' என குறிப்பிடுவர். இதனை பெரும்பதுமனார்,

**மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர் (குறுந். 7: 2)**

எனும் பாடலடி வாயிலாக உணர்த்துகிறார்.

**குடவோலை முறை**

மக்கள், ஊராண்மை, நாட்டாண்மைக் கழகங்களுக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க தகுதியுடையார் பெயர்களை ஓலையில் எழுதி அவற்றைக் குடத்தில் இடுவர். பின் குடத்தின் வாயைத் துணியால் போர்த்திக் கயிற்றால் கட்டி அதன் மீது இலச்சினையைப் பொறிப்பர். பின்னர், ஆவணமாக்கள் பலர்முன் குடத்தின் மேலிட்ட இலச்சினையைச் சரிபார்த்து நீக்கி உள்ளிருக்கும் ஓலைகளை எடுத்து தேர்ந்தெடுக்கப்பட்டோர் இவரென முடிவு செய்வர். குடவோலை முறை என சொல்லப்படும் இம்முறை பழைய கல்வெட்டுக்களில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

கயிற்றால் கட்டப்பட்ட குடத்தில் உள்ள ஓலைகளை ஆவணமாக்கள் அக்குடத்தின் மேலிட்ட இலச்சினையை ஆராய்ந்து சரிபார்த்து பின் அவ்வோலைகளைக் குடத்தில் இருந்து வெளியே எடுப்பர் என்பதை மருதன் இளநாகனார்,

**கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார்**
**பொறி கண்டு அழிக்கும் ஆவணமாக்களின் (அகம். 77: 7-8)**

எனக் குறிப்பிடுவதால், பண்டைத் தமிழர்கள் ஆட்சி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க குடவோலை முறையைப் பயன்படுத்திய செய்தியை அறிய முடிகிறது.

## நிறைவுரை

பண்டையத் தமிழர்கள், தங்கள் முன்னோர்களின் மரபைப் பின்பற்றும் வகையில் அவர்கள் கடைப்பிடித்த பழக்கவழக்கங்களை தங்கள் வாழ்க்கையிலும் பின்பற்றி, அம்மரபில் இருந்து வழுவாமல் வாழ்ந்தனர் என்பதை இக்கட்டுரைத் தெரியப்படுத்துகிறது.

## குறிப்புகள்

1. பாஸ்கல்கிஸ்பர்ட். எஸ்.ஜே, சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப.231.
2. பாஸ்கல்கிஸ்பர்ட். எஸ்.ஜே, மு.கு.நூல், ப..232.
3. கலைக்களஞ்சியம் - தொகுதி ஏழு, பக். 29-30.
4. தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சங்ககாலம்- வாழ்வியல் - தமிழ்நாட்டு வரலாறு, ப.204.
5. கௌமாரீஸ்வரி. எஸ். (ப.ஆ.,), அபிதான சிந்தாமணி(செம்பதிப்பு), ப.591.